# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1882/51 - 2014 ඔක්තෝබර් මස 03 වැනි සිකුරාදා - 2014.10.03

*1882/51 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகச் சட்டம்**

*2008 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் 5 (உ) பிரிவுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 20 ஆவது பிரிவின் (1) ஆம் உப்பிரிவின் கீழ் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் ஆளுநர்கள் சபையால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

தவிசாளர்,<br>
ஆளுநர்கள் சபை,<br>
வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்.

இரத்மலானை,<br>
2014, செப்ரெம்பர் 25.

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க,®பல்கலைக்கழகக் கல்லூரி@க் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2014, ஒக்ரோபர் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இத்தால் தாபிக்கப்பட்டனவும் இக்கட்டளைச் சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டனவுமான விசேடமான நிறுவகங்களுக்கு (இதனகத்துப்பின்னர் ஒரு ''கல்லூரி'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஏற்புடையதாதல் வேண்டும்.

3. ஒரு கல்லூரியானது வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்துடன் (இதனகத்துப்பின்னர் ''பல்கலைக்கழகம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இணைக்கப்பட்ட ஒரு நிறுவகமாக இருத்தல் வேண்டும்.

4. சட்டத்தின் 5(எ) பிரிவினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, ஒரு கல்லூரி பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

   (அ) தேசிய தொழில் தகைமைகள், மட்டம் 5,6 மற்றும் 7 கல்விநெறிகளையும் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான ஓர் ஒத்த மட்டத்திலான வேறு தொழில்நுட்பவியல் கல்விநெறிகளையும் நடத்துதல்;

   (ஆ) தேசிய தொழில் தகைமைக் கல்விநெறிகளிலும் ஒத்த மட்டத்திலுள்ள தொழில்நுட்பவியல் கல்விநெறிகளிலும் (இதனகத்துப்பின்னர் ''கற்கை நெறிகள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை

உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காகப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் பரீட்சைகளை நடத்துதலும் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களும் அதன்பொருட்டு ஆக்கப்படக்கூடிய எவையேனும் துணை விதிகளால் விதிக்கப்படக்கூடிய அத்தகைய வேறு நிபந்தனைகளைத் திருப்தி செய்கின்றவர்களுமான ஆட்களைப் பல்கலைக்கழகத்தால் பட்டங்கள், திப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகள் வழங்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாக விதந்துரைத்தலும் ;

(இ) வேறு எவையேனும் கற்கைநெறிகளில் வழங்கப்படவுள்ள பட்டங்கள், திப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகள் ஆகியவற்றைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் தீர்மானித்தல் ;

(ஈ) அதன்பொருட்டு ஆக்கப்பட்ட ஏதேனும் தோதான சாதனத்துக்கிணங்கக் கல்லூரியொன்றுக்கு அனுமதி நாடுகின்ற ஆட்கள் சித்தியடைந்த பரீட்சைகளையும் பின்பற்றப்பட்ட கற்றல் அல்லது கற்கைக் காலப்பகுதிகளையும் அங்கீகரிக்குமாறும் அத்தகைய அங்கீகாரத்தை மீளப்பெறுமாறும் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(உ) ஒரு கல்லூரியால் நடத்தப்படுகின்ற ஏதேனும் திப்ளோமா அல்லது கைத்தொழில் முகப்படுத்திய குறுகிய காலச்சான்றிதழ் கல்விநெறிகளைப் பின்பற்றுவதற்கு மாணவரை அனுமதிப்பதற்குத் தேவையான தகைமைகளை, கற்கைச் சபையின் கலந்தாலோசனையுடன், பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தலும் பல்கலைக்கழகத்தின் கலந்தாலோசனையுடன் மாணவரை அனுமதித்தலும் ;

(ஊ) வெளிவாரி அமைப்புக்களிடமிருந்து கல்விநெறி ஒத்திசைவைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் நாடுதல் ;

(எ) ஒரு கல்லூரியின் தேவைக்காக நூலகங்களையும் ஆய்வுகூடங்களையும் வேறு கட்டடங்களையும் நிறுவுதல், பொருட் சாதனங்களைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல் ;

(ஏ) ஒரு கல்லூரியின் நோக்கத்துக்காகத் தேவைப்படக்கூடிய அத்தகைய கல்விசார், நிருவாக மற்றும் வேறு பதவிகளைத் தாபித்தல் அத்துடன் அத்தகைய ஏதேனும் பதவியை ஒழித்தல் அல்லது இடைநிறுத்திவைத்தல் ;

(ஐ) அந்நோக்கத்துக்காக ஆக்கப்பட்ட ஏதேனும் தோதான சாதனத்துக்கிணங்கக் கட்டணங்களை விதித்தலும் பெறுதலும் ;

அத்துடன்

(ஒ) மேலே குறிப்பிடப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அவசியப்படக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

5. பின்வருவோர் கல்லூரியின் அலுவலர்களாக இருத்தல் வேண்டும் :-

(அ) கல்லூரியின் பணிப்பாளர் (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர்" என்று குறிப்பீடுசெய்யப்படும்) ; அத்துடன்

(ஆ) கல்லூரியின் பதிவாளர்.

6. (1) பணிப்பாளர் அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் ஒருப்பாட்டுடன், பல்கலைக்கழகத்தின் ஆளுநர்கள் சபையால் நியமிக்கப்படல் வேண்டுமென்பதுடன் அவர் கல்லூரியின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருத்தலும் வேண்டும்.

(2) (அ) பணிப்பாளர் அவரது பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்துக்கு அல்லது அவரது அறுபது வயதை நிறைவுசெய்யும் வரையில், இவற்றில் எது முதலில் நடைபெறுகின்றதோ அதுவரையில், பதவி வகித்தல் வேண்டும் :

(ஆ) எவரேனும் ஆள் அடுத்துத்தொடரும் இரு பதவிக் காலங்களுக்கு மேல் ஒரு பணிப்பாளராக நியமிக்கப்படலாகாது.

(3) அந்நோக்கத்துக்காகக் கூட்டப்பட்ட கல்லூரியின் முகாமைச் சபையின் ஒரு விசேட கூட்டத்தில், அத்தகைய கூட்டத்துக்குச் சமூகமளித்துள்ள சபையின் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஓர் உறுப்பினரின் தலைமையில் சபையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதவர்களால் நிறைவேற்றப்படும் ஒரு கண்டனத் தீர்மானத்தின் பேரில் பல்கலைக்கழகத்தின் ஆளுநர்கள் சபையால் பணிப்பாளர் அவரின் பதிவியிலிருந்து அகற்றப்படலாம்.

(4) பணிப்பாளர் சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது அத்தகைய வேறு ஏதேனும் காரணத்துக்காகத் தமது கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருக்குமிடத்து,பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் (இதனகத்துப்பின்னர் "உபவேந்தர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய இயலாமை நிகழ்ந்த ஏழு நாட்களுக்குள் பணிப்பாளார் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும் வரையில் கல்லூரியின் பதிவாளர் அந்தப் பதவிக்குரிய வழமையான கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

(5) பணிப்பாளரின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படுமிடத்து, அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள் உபவேந்தர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பொருத்ததான ஆளொருவரை நியமித்தல் வேண்டும். அத்தகைய நியமனம் செய்யப்படும் வரை கல்லூரியின் பதிவாளர் பணிப்பாளரின் பதவிக்குரிய வழமையான கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

(6) (1) பின்வருவன பணிப்பாளரின் கடமையாக இருத்தல் வேண்டும் :-

(அ) பல்கலைக்கழகத்தின் ஆளுநர்கள் சபையால் அதன் பொருட்டுக் காலத்துக்குக் காலம் வழங்கப்படக்கூடிய அத்தகைய பணிப்புகளுக்கிணங்க இச்சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகள் கல்லூரிக்கு ஏற்புடைய வரையிலும் அல்லது அதனுடன் தொடர்புடைய வரையிலும் முறையாகக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிப்படுத்துதல். அத்துடன் அந்நோக்கத்துக்கு அவசியமானவையென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் அவர் பிரயோகிக்கலாம்;

(ஆ) கல்லூரியின் முகாமைச்சபையின் எல்லா முடிவுகளுக்கும் பயனளித்தல் அல்லது பயனளிக்கப்படுதலை உறுதிசெய்தல் ;

(இ) கல்லூரியினுள் ஒழுக்காறைப் பேணுதல் ; அத்துடன்

(ஈ) கல்லூரியின் நடவடிக்கைகள் பற்றிய ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.

(7) (1) பின்வருவன பதிவாளரின் கடமையாக இருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளரின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டுக்கும் அமையக் கல்லூரியின் பொது நிருவாகத்திற்கும் அதன் கல்வித்துறைசாராப் பணியாட்தொகுதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்புடையவராதலும் ;

(ஆ) கல்லூரியின் பதிவேடுகளினதும் ஆதனத்தினதும் கட்டுக்காப்பிற்குப் பொறுப்புடையராதலும்; அத்துடன்

(இ) இக்கட்டளைச் சட்டத்தால் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தால் அவருக்கு உரித்தாக்கப்படக் கூடியவாறான அல்லது அவர் மீது சுமத்தப்படக்கூடியவாறான அல்லது அவருக்குக் குறித்தொதுக் கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும்.

7. கல்லூரியின் அதிகார சபைகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) முகாமைச் சபை;

(ஆ) கற்கைச் சபைகள் ; அத்துடன்

(இ) ஒரு கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு குழுக்கள்.

8. கல்லூரியொன்று ஒரு முகாமைச் சபையை (இக்கட்டளைச்சட்டத்தில் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கொண்டிருத்தல் வேண்டும். உபவேந்தரால் நியமிக்கப்படும் அதுவே கல்லூரியின் கல்விசார் மற்றும் நிறைவேற்று அமைப்பாக இருக்க வேண்டுமென்பதுடன் பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :-

(i) பணிப்பாளர்; அத்துடன்

(ii) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்

(ஆ) பின்வரும் ஏனைய நியமன உறுப்பினர்கள் :-

(i) ஆளுநர்கள் சபையால் அதன் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒருவர் ;

(ii) கற்கைகள் சபையால், 13.1 (உ) இன் கீழான உறுப்பினர்கள் நீங்கலாக, அதன் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இருவர்,

அத்துடன்

(iii) கைத்தொழிலுக்குத் தனிச்சிறப்பான சேவையாற்றியுள்ள ஆட்கள் மத்தியிலிருந்து பல்கலைக்கழகத்தால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இருவர்.

9. (1) பணிப்பாளரே சபையின் தவிசாளராதல் வேண்டுமென்பதுடன் அவரே சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதலும் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் இல்லாதிருப்பின் அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குவதற்கென அவர்களிடையேயிருந்து ஓர் ஊறுப்பினரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) கல்லூரியின் பதிவாளர் சபையின் செயலாளராதல் வேண்டும்.

(3) சபையின் நியமன உறுப்பினர் ஒவ்வொருவரும், தமது பதவியை முன்னரே விட்டு விலகும் வரை இ அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீள் நியமனத்துக்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் எவரேனும் நியமன உறுப்பினர் அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் தமது பதவியை விட்டு விலகுவாராயின் அவரது பின்னுறுபவர், தமது பதவியை முன்னரே விட்டு விலகும் வரை அவருக்கு முன்பிருந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) சபையின் நியமன உறுப்பினர் எவரும் அவரது கைப்பட உபவேந்தருக்கு முகவரியிட்ட எழுத்திலான கோரிக்கையின் மூலம் அவரது பதவியைத் துறக்கலாம்.

(5) சபையின் நியமன உறுப்பினர் ஒருவர் உபவேந்தரால், குறிப்பிட்ட காரணங்களுக்காகப் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(6) வரவின்மைக்கான அனுமதி பெறாமல் சபையின் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாகச் சமுகமளிக்காத சபையின் நியமன உறுப்பினர் எவரும் சபையின் உறுப்பினரொருவராக அவரது பதவியை விட்டு விலகு வதாக கருதப்படுதல் வேண்டும்.

(7) எவரேனும் உறுப்பினர் பதவியைத் துறப்பதன் நிமித்தம் அல்லது அகற்றப்படுவதன் நிமித்தம் அல்லது (6) ஆம் உட்பந்தியின் பிரகாரம் சபையின் நியமன உறுப்பினர்கள் மத்தியில் எழுகின்ற ஒரு வெற்றிடமானது. இக்கட்டளைச் சட்டத்தின் 8ஆம் பந்தியின் (ஆ) உட்பந்தியின் கீழ் ஓர் உறுப்பினரை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதேமுறையில் நிரப்பப்படல் வேண்டும்.

10. (1) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(2) சபை அவசியமான பொழுதெல்லாம் கூடுதல் வேண்டும்; ஆயின் ஒவ்வோராண்டிலும் எட்டுத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

(3) சபையின் தவிசாளர் அவர் அவசியமெனக் கருதும்போதெல்லாம் அல்லது சபையின் மொத்த உறுப்பினர் தொகையின் மூன்றிலொரு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களிடமிருந்து எழுத்திலான வேண்டுகோள் கிடைக்கப்பெறுவதன்மேல், ஒரு வாரத்தினுள் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

11. கல்லூரியின் ஓர் ஊழியரான சபையின் உறுப்பினரொருவர் ஊதியம் எதற்கும் உரித்துடையவராதலாகாது. எனினும் ஏனைய உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்க வேண்டியவாறான அத்தகைய ஊதியம் அல்லது படிகள் செலுத்தப்படலாம்.

12. (1) இக்கட்டளைச் சட்டத்தினதும் அந்நோக்கத்துக்காகப் பல்கலைக்கழகத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபை இக்கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பந்தியால் கல்லூரிக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பந்தியால் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றிச் சபையானது பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்:-

(அ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் கல்லூரியின் ஆசிரியர்களையும் ஏனைய நிருவாக அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமித்தல் ;

(ஆ) கற்கைகள் சபையின் கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்துக்குப் பின்வருவனவற்றை விதந்துரைத்தல் :-

(i) கல்லூரியால் நடத்தப்படும் பல்வேறு கற்கைநெறிகளுக்கு வழங்கப்படவேண்டிய திப்ளோமாக்கள் சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்கள்;

(ii) பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் ஏதேனும் பட்டங்களுக்கும் வேறு கல்விசார் சிறப்புகளுக்கும் தகுதிபெற விரும்புகின்ற கல்லூரியின் மாணவர்கள் திருப்திசெய்யவேண்டிய கற்கை நெறிகளையும் பின்பற்ற வேண்டிய பயிற்சியையும் ஏனைய நிபந்தனைகளையும் ;

(iii) கல்லூரியின் தேர்வாளர்களாக நியமிப்பதற்குப் பொருத்தமான ஆட்கள்;

(iv) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், ஏழைக் கல்வியுதவிகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசுகள் ஆகியவற்றுக்கான போட்டி முறைகளும் நிபந்தனைகளும்;

(இ) கல்லூரிக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்களினதும் ஏனைய நிருவாக அலுவலர்களினதும் ஊழியர்களினதும் தகைமைகளைப் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(ஈ) கல்லூரியின் பணியாளர் தொகுதியிலுள்ள ஆட்களை இடைநிறுத்துதல், பதவிவிலக்குதல் அல்லது அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் பற்றிப் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல்;

(உ) அதன்பொருட்டு ஆக்கப்பட்ட ஏதேனும் தோதான சாதனத்துக்கிணங்க ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்களையும் புலமைப் பரிசில்களையும் புலமைப் பொருளுதவிகளையும் ஏழைக்கல்வியுதவிகளையும் பதக்கங்களையும் வேறு பரிசுகளையும் ஏற்படுத்துதலும் வழங்குதலும்;

(ஊ) அதன்பொருட்டுப் பல்கலைக்கழகத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் துணை விதிக்கிணங்க கல்லூரிக்கு வெளியே எவையேனும் இடங்களில் கற்கை நெறிகளை அல்லது எவையேனும் கற்கை நெறிகளின் பகுதிகளை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்தல் ;

(எ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கல்லூரியின் கற்கை நெறிகளை ஒத்தவற்றை அல்லது கணிசமான அளவு ஒத்தவற்றைக் கொண்ட பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் ஆசிரியர்களையும் மாணவர்களையும் கல்விமான்களையும் பரிமாறுவதன் மூலம் அல்லது வேறுவகையில் ஒத்துழைத்தல்;

(ஏ) கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் ஆகியோரின் ஒழுக்காறையும் பொதுவான நல்வாழ்வையும் ஒழுங்குமுறைப்படுத்துதலும் வதிவிட வசதிகள் வழங்குதலும்;

(ஐ) வதிவு மண்டபங்களைத் தாபித்து நிர்வகித்தல், மாணவர்களுக்கு வதிவிட வசதிகளை வழங்கக்கூடிய தங்குமிட இல்லங்களுக்கு உரிமமளித்தல் மற்றும் கல்லூரியின் மாணவர்களுக்குத் தேவைப்படக்கூடிய ஏனைய எவையேனும் சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல்;

(ஒ) ஏதேனும் தோதான சாதனத்துக்கிணங்க வங்கிகளிடமிருந்தும் வேறு முகவர் நிறுவனங்களிடமிருந்தும் கடன்களைப் பெறுவதற்குக் கல்லூரியின் மாணவர்களுக்கு உதவுதல்;

(ஓ) அவசியமானதென அல்லது பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினதான நிலையியற் குழுக்களை அல்லது தேவைக்கேற்ற குழுக்களை நியமித்தல், அத்தகைய குழுக்களின் பணித்துறை நியதிகளைக் குறித்துரைத்தல் அத்துடன் அவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளைத் திரிபுடனனோ அல்லது திரிபுகள் அல்லாமலோ பரிசீலித்தலும் அங்கீகரித்தலும் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட எவையேனும் அறிக்கைகளை நிராகரித்தல்;

(ஔ) பல்கலைக்கழகத்தின் சார்பாக கல்லூரியின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருத்தலும் கட்டுப்படுத்தலும் நிருவகித்தலும்;

(க) குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கெனக் கல்லூரியின் கையுதிர்ப்பில் வைக்கப்பட்ட நிதிகள் எவற்றையும் நிருவகித்தல்;

(ங) கல்லூரியின் நிதி மதிப்பீடுகளைத் தயாரித்தலும் அத்தகைய மதிப்பீடுகளை வியாபாரத் திட்டத்துடன் சேர்த்துப் பல்கலைக்கழகத்துக்கும் அமைச்சுச் செயலாளருக்கும்சமர்ப்பித்தலும்;

(ச) கல்லூரியின் சார்பில் செய்யப்பட்ட ஆதனத்தின் விருப்பாவணக் கையளிப்புக்களையும் நன்கொடைகளையும் வேறு மானியங்களையும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் பெற்றுக்கொள்ளுதலும் ஏற்றுக்கொள்ளுதலும்;

(ஞ) கல்லூரியின் ஆண்டறிக்கையையும் கணக்காய்வுசெய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகளையும் பரிசீலனை செய்தலும் அத்தகைய அறிக்கையையும் கணக்குகளையும் பல்கலைக்கழகத்துக்கும் அமைச்சுச் செயலாளருக்கும் சமர்ப்பித்தலும்;

(ட) கல்லூரியின் வேலையைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான கட்டடங்கள், வளவுகள், தளபாடங்கள், சாதனங்கள் மற்றும் வேறு பொருட்கள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்தல்;

(ண) கல்லூரி மாணவர்களின் பொது நல்வாழ்வை ஊக்குவிப்பதற்காக மாணவர்களின் பிரதிநிதிகளை உள்ளடக்க வேண்டிய நலன்புரிச் சபை ஒன்றை நியமித்தலும் அதன் ஆக்க அமைவையும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் குறித்துரைத்தலும்;

(த) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் தொடர்பில் சட்டத்தின் கீழ் ஆக்குவதற்கு அதற்கு வலுவளிக்கப்பட்ட ஏதேனும் தோதான சாதனம் பற்றி ஆளுநர்கள் சபைக்கு விதப்புரைகளைச் செய்தல்;

ஆயின், எவ்வாறாயினும் கற்கை நெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான விதப்புரைகள் எவையும், அதே விடயந் தொடர்பில் கற்கைகள் சபையால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்னர் தவிரச் செய்யப்படலாகாது.

(ந) சட்டத்தினதும் இக்கட்டளைச் சட்டத்தினதும் ஏதேனும் ஏற்புடைய தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்கக் கல்லூரி தொடர்பான எல்லா விடயங்களையும் கட்டுப்படுத்துதலும் தீர்மானித்தலும்; அத்துடன்

(ப) மேலே குறித்துரைக்கப்பட்டவற்றுக்கு இடைநேர்விளைவான அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தல்.

(3) ஏதேனும் கல்வித்துறை சார்ந்த கருமம்தொடர்பில் அதன் அபிப்பிராயத்தைப் பதியவும் சபைக்கு அனுப்பிவைக்கவும் கற்கைகள் சபைக்கு முதலில் வாய்ப்பொன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி அக்கல்வித்துறைசார்ந்த கருமம் தொடர்பில் தீர்மானமெதுவும் சபையால் நிறைவேற்றப்படுதலாகாது.

எனினும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் தவிர அவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எதன்மீதும் நடவடிக்கை எடுக்கப்படலாகாது. இப்பந்தியில் "கல்வித்துறை சார்ந்த கருமம்" என்பது பல்கலைக்கழகத்தின் கல்விப் பேரவையினதும் கற்கைகள் சபையினதும் கட்டுப்பாட்டிற்கும் பொதுப் பணிப்பிற்கும் அமைவான கருமம் எனப் பொருளாகும்.

13. (1) கற்கைகள் சபையொன்று தாபிக்கப்படல் வேண்டும். அதுபின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) அதன் தவிசாளராக இருக்க வேண்டிய பணிப்பாளர்;

(ஆ) கல்லூரியின் நூலகத்துக்குப் பொறுப்பான ஒருவர்;

(இ) கல்லூரியின் நிரந்தர ஆசிரியர்கள்;

(ஈ) கைத்தொழிற் பயிற்சிக்குப் பொறுப்பான ஆசிரியர் ;

(உ) கல்லூரியின் மாணவர் வகுப்புப் பிரதிநிதிகளால் தெரிவுசெய்யப்பட்ட இரு மாணவர்கள்; அத்துடன்

(ஊ) கல்லூரியின் பணியாளார் தொகுதி உறுப்பினர்களல்லாதவர்களும் கல்லூரிக்கு ஏற்புடைய ஏதேனும் கற்கைத் துறையில் உயர்சிறப்புப் பெற்ற ஆட்கள் மத்தியிலிருந்து சபையால் தெரிவுசெய்யப்பட்டவர்களுமான இரண்டு ஆட்கள்.

(2) உட்பந்தி (1) (உ) இல் குறிப்பிடப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் எவரும் அவரது பதவியை முன்னரே விட்டு விலகும் வரை இ அவர் தெரிவுசெய்யப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட ஓராண்டு காலத்துக்கும் ஏனைய தெரிவுசெய்யப்படட உறுப்பினர்கள் அனைவரும் மூன்றாண்டு காலத்துக்கும் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீளத்தெரியப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்;

ஆயின் எவ்வாறாயினும் தெரிவுசெய்யப்பட்ட ஓர் உறுப்பினர் எந்நிலையை அல்லது எப்பதவியை வகிப்பதன் காரணமாகத் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகுதிபெற்றாரோ அந்நிலையை அல்லது அப்பதவியை வகிக்கும் வரை மட்டுமே உறுப்பினர் பதவியை வகித்தல் வேண்டும்.

(3) தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினரொருவர் அவரின் பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் தமது பதவியை விட்டு விலகுவாராயின் அவரது பின்னுறுபவர், தமது பதவியை முன்னரே விட்டு விலகும் வரை அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) உட்பந்தி (1) (உ) இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் பரீட்சைகள் மற்றும் தொடர்புடைய விடயங்கள் தொடர்பான கற்கைகள் சபையின் கூட்டமெதிலும் கலந்துகொள்வதிலிருந்து விலக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விலக்கலால் தடையுறாவண்ணம் அத்தகைய கூட்டம் உரிய முறையில் நடத்தப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(5) உட்பந்தி (1) (உ) மற்றும் (ஊ) இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் பணிப்பாளருக்கு முகவரியிட்டு அவரின் கைப்பட எழுதிய ஒரு வேண்டுகோளின் மூலம் அவரின் பதிவியைத் துறக்கலாம்.

(6) கற்கைகள் சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண், (4) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, மொத்த உறுப்பினர் தொகையின் மூன்றிலொரு பங்காக இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சபை அவசியமான பொழுதெல்லாம் கூடுதலும் வேண்டும். ஆயினும் ஒவ்வோராண்டிலும் பத்துத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

14. (1) கற்கைகள் சபை சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமையக் கல்லூரியின் போதனை, கல்வி, ஆராய்ச்சி மற்றும் பரீட்சைகளை நடத்துதல் ஆகியவற்றின் பொதுவான கட்டுப்பாட்டுக்கும் செயலாட்சிக்கும் பொறுப்பானதாயிருத்தல் வேண்டும்.

(2) கற்கைகள் சபை (1)ஆம் உட்பந்தியால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி –

(அ) சபையால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏதேனும் விடயத்தைப் பரிசீலனை செய்து அறிக்கையிட வேண்டும் ;

(ஆ) பின்வரும் விடயங்கள் பற்றிய விதப்புரைகளையும் அறிக்கைகளையும் சபைக்குச் சமர்ப்பித்தல் –

(i) கற்கை நெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் என்பவை தொடர்பான விடயங்கள் ;

(ii) கற்கை நெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைகள் ;

(iii) தேர்வாளர்களாக அங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்கள்;

(iv) பட்டங்கள், திப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகள் ஆகியவற்றை வழங்குவதற்குத் தகுதியுடையவர்களாகத் தேவையான பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களும் ஏனைய நிபந்தனைகளைத் திருப்தி செய்தவர்களுமான ஆட்கள்;

(v) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், ஏழைக்கல்வியுதவிகள், பதக்கங்கள் அத்துடன் வேறு பரிசில்கள் ஆகியவற்றுக்கான போட்டி முறையும் நிபந்தனைகளும்;

(vi) புலமைப்பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், ஏழைக்கல்வியுதவிகள், பதக்கங்கள் அத்துடன் வேறு பரிசில்கள் ஆகியவற்றை வழங்குவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்கள் ;

(vii) கற்கைகள் சபையால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏதேனும் விசேட விடயத்தை அல்லது விடயங்களைப் பரிசீலனை செய்து அறிக்கையிடும் நோக்கத்துக்காக அதன் சொந்த உறுப்பினர்களைத் தவிர வேறு ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமித்தல்.

15. (1) கல்லூரியொன்று கல்லூரி நிதியம் (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) என்றறியப்படும் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதனுள் –

(அ) ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க மாணவர்களால் செலுத்தப்படும் கட்டணங்களும்;

(ஆ) அறக்கொடைகளிலிருந்து பெறப்படும் எல்லா வருமானமும் ;

(இ) கல்லூரிக்கு மானியங்களாகப் பாராளுமன்றத்தால் வழங்கப்படும் எல்லாப் பணங்களும் ; அத்துடன்

(ஈ) எத்தன்மைத்தான ஏதேனும் மூலத்திலிருந்து கல்லூரிக்கு உரித்தாகின்ற அத்தகைய வேறு பணங்களும் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒரு மாதத்தின் போது நிதியத்தில் வரவுவைக்கப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் தோதான வருவாய்த் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டு அவற்றின் ஒரு பொழிப்பு அடுத்துவருகின்ற மாதம் முடிவதற்கு முன்னர் பல்கலைக்கழகத்தின் பணிப்பாளருக்கும் தகவல் அமைச்சின் செயலாளருக்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

16. (1) பணிப்பாளரே கல்லூரியின் பிரதம கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்.

(2) பிரதம கணக்கீட்டு அலுவலராகப் பணிப்பாளரின் கடமைகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) சபையால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய ஒரு முறையில் கல்லூரியின் கணக்குகளைப் பேணுதல் ;

(ஆ) நிதியத்துக்குச் செலுத்தப்படும் எல்லாப் பணங்களையும் பெற்றுக்கொள்ளுதலும் அத்தகைய பணங்களை முறையான கணக்குத் தலைப்புகளின் கீழ் வரவுவைத்தலும்;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல் ;

(ஈ) சபையின் நுண்ணாய்வுக்காகச் பல்கலைக்கழகத்தால் தேவைப்படுத்தப்படுகின்ற அத்தகைய மதிப்பீடுகளையும் அடுத்துவரும் ஆண்டின் ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும் தயாரித்தல் ; அத்துடன்

(உ) காலத்துக்குக் காலம் பல்கலைக்கழகம் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய விவரங்களைக் கொண்டதாகவும் ஆண்டுக் கணக்குக் கூற்றையும் வியாபாரத் திட்டமொன்றையும் கல்லூரியின் நடவடிக்கைகள் தொடர்பான புள்ளிவிவரங்களையும் தயாரித்தல்.

(3) உட்பந்தி (2) இன் ஏற்பாடுகளால் தடையுறாவண்ணம், குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கெனச் செய்யப்பட்ட மானியங்களிலிருந்து அல்லது குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து கல்லூரியால் பெறப்பட்ட வருமானம் கல்லூரியின் கணக்குகளில் புறம்பாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், கல்லூரியின் பொது நோக்கங்களுக்கு அல்லது அத்தகைய மானியங்கள் அல்லது அறக்கொடைகள் எந்நோக்கத்துக்காக அல்லது எக் குறிக்கோளுக்காகச் செய்யப்பட்டனவோ அது தவிர்ந்த வேறு நோக்கத்துக்கு அல்லது குறிக்கோளுக்கு அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவு எதுவும் செய்யப்படுதலுமாகாது.

(4) கல்லூரியின் கணக்குப் புத்தகங்கள் கல்லூரியின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

17. (1) கல்லூரியின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் ஒவ்வோராண்டும் கல்லூரியின் கணக்குகளைக்கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்வித்தல் வேண்டும்.

(3) ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளினதும் ஆண்டறிக்கையினதும் பிரதியொன்று பணிப்பாளரால் பல்கலைக்கழகத்துக்கும்அமைச்சின் செயலாளருக்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

18. (1) கல்லூரியின் பணியாட்டொகுதி, சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் அவசியமென அது கருதக்கூடியவாறு, பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் சபையால் நியமிக்கப்படும் அத்தகைய அலுவலர்களையும் ஆசிரியர்களையும் ஏனைய நிருவாக அலுவலர்களையும் ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்

(2) கல்லூரியின் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் பணிப்பாளரின் பணிப்புக்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டவர்களாதல் வேண்டும்.

19. இக் கட்டளைச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி –

"சட்டம்" என்பது 2008 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகச் சட்டம் என்று பொருள்படும்;

"தோதான சாதனம்" என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைச்சட்டம், நியதிச்சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதி என்று பொருள்படும்;

"ஆளுநர்கள் சபை"என்பது, பல்கலைக்கழகத்தின் ஆளுநர்கள் சபை என்று பொருள்படும்;

"கைத்தொழில" என்பது, நிருமாணம் அல்லது தயாரிப்பு அல்லது ஏதேனும் வேறு தொழில் நுட்பத்துறையில் அல்லது சேவைத்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களென்று பொருள்படும் ;

"உரிமம்பெற்ற வர்த்தக வங்கி" என்பது, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தால் கருதப்படும் உரிமம்பெற்ற ஒரு வர்த்தக வங்கியென்று பொருள்படும்.

"ஆசிரியர்" என்பது, ஒரு சிரேஷ்ட பேராசிரியர்,பேராசிரியர், துணைப் பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர் அல்லது விரிவுரையாளர் என்று பொருள்படும்.

**அட்டவணை**

1. அனுராதபுரப் பல்கலைக்கழகக் கல்லூரி, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்.
2. குளியாப்பிட்டிய பல்கலைக்கழகக் கல்லூரி, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்.
3. மாத்தறைப் பல்கலைக்கழகக் கல்லூரி, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்.
4. இரத்மலானைப் பல்கலைக்கழகக் கல்லூரி, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்.
5. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்.

10-769

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.